GRADE 5

5

# மே/களு/அல் - ஹுமைஸரா தேசிய பாடசாலை

## சீனன் கோட்டை, பேருவளை.

இடம் : ஜாபிர் ஹாஜியார் நினைவு மண்டபம்

காலம் : 25.12.2021 (சனிக்கிழமை)

நேரம் : மு.ப 8.00 - பி.ப 4.30 வரை

# வழிகாட்டல் கருத்தரங்குக் கையேடு

# EASY WAY


ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்
அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை
பேருவளை.
0771616340


[பக். 2 ஐப் பார்க்க

- **1, 2** ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

**1.**



(1) (2) (3)

**2.**



(1) (2) (3)

- **3, 4** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

**3.**



(1) (2) (3)

**4.**



(1) (2) (3)

- **5** ஆம் **6** ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.

**5.**



(1) (2) (3)

**6.**



(1) (2) (3)

- **7, 8, 9, 10** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

**7.**




(1)


(2)


(3)

**8.**




(1)


(2)


(3)

**9.**




(1)


(2)


(3)

**10.**




(1)


(2)


(3)

- **11, 12** ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.

**11.**


(1)


(2)


(3)

**12.**


(1)


(2)


(3)

- **13, 14** ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




**13.** மேலே தரப்பட்டுள்ள உருக்களை மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம் அவற்றுள் இரண்டு இருக்கும் கூட்டம் யாது?

(1) B, D (2) C, E (3) A, D

**14.** ஆகாயத்தொட்டி என அழைக்கப்படும் ஒரு பறவையும், இலங்கை புதிய நாணயத்தாள் அனைத்திலும் காணக்கூடிய ஒரு பிராணியும் முறையே,

(1) A, E (2) B, A (3) B, E

- **15, 16** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் உள்ள உருவை ஒத்த உருவினைத் தெரிவு செய்க.

**15.**



(1) (2) (3)

**16.**



(1) (2) (3)

- **17, 18** ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.

**17.**



(1) (2) (3)

**18.**   

(1) (2) (3)

- **19, 20** ஆம் வினாக்களில் தரப்படும் உரு மாற்றத்திற்கமைவாக வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்து கோடிடுக.

**19.** 

  

(1) (2) (3)

**20.** 

  

(1) (2) (3)

- **21, 22** ஆம் வினாக்களில் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.

**21.**   

(1) (2) (3)

**22.**   

(1) (2) (3)

- **23, 24** ஆகிய வினாக்களில் குறைந்த தொடர்பு உள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

**23.**   

(1) (2) (3)

**24.**


(1)


(2)


(3)

● **25, 26** ஆகிய வினாக்களுக்கு சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

**25.** இயற்கை - ஒளி


(1)


(2)


(3)

**26.** எரிபொருள் - பிரயாணம்


(1)


(2)


(3)

● **27, 28** ஆகிய வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களை கவனத்திற்கொண்டு விடை தருக.


A


B


C


D


E

**27.** மிகப்பெரிய விலங்கும், மிகச்சிறிய விலங்கும் முறையே எவை?

(1) A உம் D உம் (2) A உம் B உம் (3) A உம் E உம்

**28.** மாமிசத்தை மட்டும் உண்ணக் கூடியதும் அனைத்தும் உண்ணியாக கருத முடியாததுமான விலங்குகள் முறையே,

(1) C உம் B உம் (2) C உம் A உம் (3) D உம் E உம்

● பின்வரும் உருக்களைக் கொண்டு **29, 30** ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.


P


Q


R


S


T

**29.** P, Q ஆகிய இரண்டையும் ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்தும் இயல்பு யாது?
(1) வீடுகளை அண்டி வசித்தல்
(2) இரவில் சுறுசுறுப்பாக இருத்தல்
(3) இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளுதல்.

**30.** Q, R ஆகியவற்றில் காணப்படும் ஆனால் P, S ஆகியவற்றில் இல்லாத இயல்பு யாது?
(1) பழங்களை உணவாகக் கொள்ளல்
(2) குடிபெயரும் பறவையாக இருத்தல்
(3) நீரை அண்டி வசித்தல்

- **31, 32** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவற்றில் இரண்டுக்குரிய கூட்டத்தைத் தெரிவு செய்க.

**31.** அப்பா, அண்ணா, சிற்றப்பா, தங்கை, பாட்டி
(1) அப்பா, தங்கை (2) அப்பா, சிற்றப்பா (3) சிற்றப்பா, பாட்டி

**32.** அப்பம், கொழுக்கட்டை, தோசை, பிட்டு, இடியப்பம்
(1) இடியப்பம், தோசை (2) அப்பம், தோசை (3) கொழுக்கட்டை, பிட்டு

- **33 ,34** ஆகிய வினாக்களுக்கு தொடர்பினை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.

**33.** அம்புயத்துக்கும் கமலத்துக்கும் தாமரை போன்று குதூகலத்துக்கும் களிப்புக்கும் : ........................
(1) கவலை (2) மகிழ்ச்சி (3) துன்பம்

**34.** வட்டத்துக்கும் சதுரத்துக்கும் தளவடிவம் போன்று கனவுருவுக்கும் உருளைக்கும் : ......................
(1) திண்மம் (2) திரவம் (3) தளவுரு

- **35, 36** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது யாது?

**35.** துன்பம், மகிழ்ச்சி, இன்னல், ஆனந்தம், கோபம், துயரம்
(1) கோபம் (2) ஆனந்தம் (3) துயரம்

**36.** மலேரியா, நீர் வெறுப்பு, கொலரா, டெங்கு, மஞ்சட்காமாலை, யானைக்கால்
(1) கொலரா (2) டெங்கு (3) நீர் வெறுப்பு

- **37, 38** ஆம் வினாக்களில் தரப்படும் சொற்களுள் அக்கூட்டத்திலிருந்து வேறுபடும் சொல்லின் கீழ் கீறிடுக.

**37.** ஊவா, சப்ரகமுவ, வடமத்தி, மொனராகல இதில் வேறுபடும் சொல் எது?
(1) சப்ரகமுவ (2) ஊவா (3) மொனராகல

**38.** தியலும, மகாவலி, பம்பரகந்த, லக்சபான இதில் வேறுபடும் சொல் எது?
(1) பம்பரகந்த (2) மகாவலி (3) லக்சபான

**39.** கீழே தரப்பட்டுள்ள உருக்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்

| T | Z | E | K | W | L |
|---|---|---|---|---|---|
| ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |

இக் கூட்டங்களை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ②⑤ உம் ④⑥ உம் ①③ உம்

(2) ②④ உம் ①⑥ உம் ③⑤ உம்

(3) ①⑥ உம் ⑤④ உம் ②③ உம்

● பின்வரும் கவிதையை வாசித்து **40, 41** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா.

**40.** ‘புறஞ்சொல்லலாகாது பாப்பா’ என்ற பாடல்வரி உணர்த்தும் கருத்து யாது?

(1) உண்மைக்குப் புறம்பான வார்த்தைகளைப் பேசுதல் கூடாது.

(2) மற்றவர் மனம் வருந்தும்படியான கடும் சொற்களைப் பேசுதல் கூடாது.

(3) ஒருவர் நம்மோடு இல்லாத நேரத்தில் அவரைப் பற்றி இகழ்ந்து பேசுதல் கூடாது.

**41.** தெய்வம் யாருக்குத் துணையாக இருக்கும் என்று இங்கு கூறப்பட்டுள்ளது?

(1) பொய்யும் புறமும் பேசாதவர்களுக்கு

(2) தீங்கு வருவதை விரும்பாதவர்களுக்கு

(3) மற்றவர்களுக்கு தீமை செய்பவர்களுக்கு

● **42, 43** வினாக்களுக்கு பின்வரும் கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

ஏடு படிக்கும் யாவரும்
கூடி வீடு கட்டினோம்
வீடு உடைந்து போகுமுன்
ஓடி வந்து பாருங்கள்

**42.** கவிதையில் குறிப்பிடப்படும் வீடு அமைக்கப்பட்ட இடம்

(1) குளக்கரை (2) கடற்கரை (3) ஆற்றங்கரை

**43.** ஏடு படிக்கும் யாவரும் என்பதால் கருதப்படுவது யாது?

(1) வேலைக்குச் செல்லும் அனைவரும்

(2) கல்வி கற்று முடித்த அனைவரும்

(3) கல்வி கற்கும் அனைவரும்

**44.**



இதனை முழுமையான ஒரு முக்கோணியாக மாற்றுவதற்கு இன்னும் எத்தனை சிறிய முக்கோணிகள் தேவை?

(1) 4 (2) 7 (3) 9

- **45, 46** ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

**45.**





(1)



(2)



(3)

**46.**





(1)



(2)



(3)

**47.** பண்ணையொன்றில் உள்ள கோழிகளினதும் பசுக்களினதும் எண்ணிக்கை 13 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 40 ஆகும். பண்ணையில் இருந்த கோழிகள் எத்தனை?

(1) 9 (2) 7 (3) 6

**48.** 1 தொடக்கம் 50 வரையுள்ள என்னும் எண்களில் உள்ள சதுர எண்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 140 (2) 139 (3) 90

**49.**



அருகில் உள்ள உருவில் காணப்படும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 27

(2) 36

(3) 48

- **50, 51** ஆகிய வினாக்களில் △ = 3, ▲ = 4, ⬡ = 5, ⬢ = 6, ✶ = 9 என இட்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**50.**

△ ⬡
\+ ⬢ ▲

(1) △△ (2) ✶✶ (3) ⬢⬢

**51.**

✶ ⬢ ✶
\- ⬢ △ ⬢

(1) △△△ (2) ▲▲▲ (3) ⬢⬢⬢

**52.** இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

7 □ 3 = 25 □ 4 (1) +, x (2) x, ÷ (3) x, -

- பின்வரும் தொடர்களை விளங்கி **53, 54** ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

△ x ○ = □

△ + ○ = ⬡

□ - ⬡ = △

அருகில் உள்ள உருக்கள் அனைத்துக்கும் 10 இற்கு குறைந்த பெறுமானங்களை பிரதியிடுக.

**53.** ○ இன் பெறுமானம் யாது?

(1) 2 (2) 3 (3) 4

**54.** □ இற்கு சமனான உருக்கள் எவை?

(1) ⬡ △ (2) ⬡ ○ (3) ○ ○

**55.** 


கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தை முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தெரியக்கூடிய விதம்?

(1) 8.00 (2) 7.00 (3) 12.00

**56.** 


A, B, C என்பன சதுர வடிவான மூன்று காணித்துண்டுகளாகும். B இன் சுற்றளவு 36 cm ஆகவும் C இன் சுற்றளவு 16 cm ஆகவும் இருப்பின் காணித்துண்டு A இன் பரப்பளவு யாது?

(1) 52 cm (2) 81 cm (3) 169 cm

**57.** 


இவ்வுருவில் ஆறு பக்கங்களும் 1, 2, 3, 4, 5, 6 எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக் கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன. மேற்குறித்த தாயக் கட்டையின் 4 எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எண் யாது?

(1) 1 (2) 2 (3) 6

**58.** 1 தொடக்கம் 20 வரையுள்ள எண்களில் ஏதேனும் ஓர் ஒற்றை எண்ணையும் ஓர் இரட்டை எண்ணையும் கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?

(1) ஓர் ஒற்றை எண் கிடைக்கும்

(2) ஓர் இரட்டை எண் கிடைக்கும்

(3) ஓர் இரட்டை அல்லது ஒற்றை எண் கிடைக்கும்

**59.** 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 7 (3) 8



[பக். 11 ஐப் பார்க்க

**60.** தேக்கரண்டி ஒன்றில் கொள்ளும் திரவத்தின் கனவளவு 5 மில்லிலீற்றர் ஆகும். அவற்றில் மூன்று ஒரு மேசைக் கரண்டி கொள்ளும் அளவாகும். தடவையொன்றிற்கு 2 மேசைக்கரண்டி வீதம் மருந்து எடுத்தால் எடுக்கப்படும் மருந்தின் கனவளவு எத்தனை மில்லிலீற்றர்?

(1) 20 (2) 30 (3) 45

**61.** கமல், சுந்தரி ஆகிய இருவரும் ஒரே இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தனர். முதலில் கமல் வடக்கு நோக்கி 50 மீற்றரும் சுந்தரி தெற்கு நோக்கி 50 மீற்றரும் சென்று பின்னர் இருவரும் கிழக்கு நோக்கி 50 மீற்றர் வீதம் சென்றனர். இப்போது கமலுக்கும் சுந்தரிக்கும் இடையே உள்ள தூரம் யாது?

(1) 200 மீற்றர் (2) 150 மீற்றர் (3) 100 மீற்றர்

**62.** சாந்தன் ஒரு ஏழை மாணவன் அவனிடம் ஒரு பாடசாலைச் சீருடை மாத்திரமே உண்டு. தினமும் கழுவியே அணிந்து செல்வான். இச்சம்பவத்திற்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.

(1) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லாக்கு

(2) கந்தையானாலும் கசக்கிக் கட்டு

(3) திக்கற்றவனுக்கு தெய்வமே துணை

**63.** நான் காலையில் எனது வீட்டிலிருந்து நண்பனின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது பனை மரம் ஒன்றின் நிழல் எனது வலது கைப்பக்கம் விழுந்தது எனின் பனை மரம் இருந்த திசை எது?

(1) கிழக்கு (2) வடக்கு (3) தெற்கு

**64.** முனியாண்டி 2 கிளிகளை வளர்த்து வந்தான். அதில் ஒரு கிளி 5 நிமிடத்துக்கு ஒரு தடவை "முனி" எனவும் மற்றைய கிளி 10 நிமிடத்திற்கு ஒரு தடவை "முனி" எனவும் பேசும். இரண்டு கிளிகளும் காலை 7.30 மணிக்கு ஒருமித்து "முனி" எனக் கத்தியிருப்பின் மீண்டும் எத்தனை மணிக்கு இரண்டு கிளிகளும் "முனி" எனப் பேசும்?

(1) காலை 7.35 (2) காலை 7.40 (3) காலை 7.00

**65.** பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமையாகும். ஜனவரி மாதம் 1 ஆம் திகதி என்ன கிழமை?

(1) வியாழன் (2) வெள்ளி (3) சனி

**66.**



சதுர வடிவமான காணி ஒன்றைச் சுற்றி 16 வேலித்துண்டுகள் நாட்டப்பட்டிருந்தன. இச்சதுரவடிவக் காணியை அம்புக்குறியினால் காட்டப்படும் யாதாயினும் ஒரு திசை வழியே பார்க்கும்போது அப்பக்கத்தில் தெரியும் வேலிக்கம்பங்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 4 (2) 5 (3) 6

**67.** பக்கம் ஒன்று 10 மீற்றர் அளவுடைய சதுரவடிவமான பூம்பாத்தி ஒன்றைச் சுற்றி வர 2 மீற்றருக்கு ஒரு தூண் வீதம் நடப்பட்டு வேலி அமைக்கப்பட்டது. பூம்பாத்தியைச் சுற்றி வர நடப்பட்ட தூண்கள் எத்தனை?

(1) 16 (2) 20 (3) 24

**68.** A, B, C, D, E என்பன 1, 2, 3, 4, 5 ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ளன ஆனால் இலக்கங்கள் சரியான ஒழுங்கில் தரப்படவில்லை.

* A என்பது ஒரு ஒற்றை இலக்கம்
* B என்பது 4 உம் அல்ல 5 உம் அல்ல
* C என்பது 1 ஐக் குறிக்கும்
* D என்பது 4 அல்லது 5
* E என்பது 2, 3, 4 ஆகிய எதுவும் இல்லை

ஆங்கில எழுத்து D, B ஆகிய எழுத்துக்கள் குறித்து நிற்கும் இலக்கங்கள் முறையே,

(1) 2, 4 (2) 5, 3 (3) 4, 2

**69.** பாலாவின் தாத்தா பிறந்தது ஒரு லீப் வருடமாகும். அவர் தனது 62 ஆவது பிறந்த தினத்தை 1960 ஆம் ஆண்டு கொண்டாடினார். இதற்கேற்ப பாலாவின் தாத்தா தனது 76 வது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடுவார்?

(1) 2012 (2) 2016 (3) 2020

● பின்வரும் தரவுகளை நன்கு விளங்கி **70, 71** ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

○ x ○ x ○ = 8

□ x ○ x ○ = 16

△ x △ x □ = 36

**70.** ○ + △ + □ இதற்குரிய பெறுமானம் யாது?

(1) 7 (2) 9 (3) 12

**71.** 10 ஐ விடையாகப் பெறுவதற்குரிய தொகுதி யாது?

(1) △ x ○ + △ (2) ○ + △ x □ (3) △ x □ - ○

**72.** இலக்கம் 1 இற்கு 6 உம், 2 இற்கு 5 உம், 3 இற்கு 4 உம் எதிர்ப்பக்கங்களாக அமையும் வகையில் இலக்கமிடப்பட்ட தாயக்கட்டை பின்வருனவற்றில் எது?



(1)



(2)



(3)

**73.**


உரு - 1


உரு - 2


உரு - 3

உரு 1 இல் உள்ள சதுரக் கடதாசியை உரு 2 இல் உள்ளவாறு நான்காக மடித்து உரு 3 இல் உள்ள நிழற்றிய பகுதியை வெட்டி எடுத்து மீதிப் பகுதியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?


(1)


(2)


(3)

**74.** மைதானம் ஒன்றில் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்ற வரிசையில் கொடிகள் நடப்பட்டுள்ளன. 75 வது கொடிக்கு அடுத்துள்ள கொடி யாது?

(1) சிவப்பு (2) நீலம் (3) மஞ்சள்

**75.** நான்கு சவர்க்காரக் கட்டிகளை வாங்கினால் ஒரு ஒரு சீப்பு இலவசமாகக் கிடைக்கும். இந்த நிபந்தனைக்கு அமைய திவானின் தாய்க்கு சவர்க்காரக் கட்டிகளும் சீப்புகளும் ஆக மொத்தம் 40 கிடைத்தால் அவருக்கு கிடைத்த சீப்புகள் எத்தனை?

(1) 8 (2) 10 (3) 12

**76.** வீடு ஒன்றைக் கட்டுவதற்கு 8 மனிதர்களுக்கு 10 நாட்கள் எடுக்கும். அவர்கள் ஏழு நாட்கள் வேலை செய்தனர். பின்னர் 4 பேர் விலகிச் சென்றால், எஞ்சிய வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

(1) 4 நாட்களில் (2) 6 நாட்களில் (3) 8 நாட்களில்

**77.** நான் அவனைப் போல் அல்ல. அவனும் என்னைப் போல் அல்ல ஆகவே,

(1) நான் அவனைப் போன்றவன்

(2) அவன் என்னைப் போன்றவன்

(3) நாம் இருவரும் வேறுபட்டவர்கள்

**78.** ஒரு விலங்குப் பண்ணையில் ஓர் ஆட்டுக்கு 3 கால்களும் ஒரு கோழிக்கு ஒரு காலும் காணப்பட்டன. அங்கு ஆடுகள் ஐந்தும், கோழிகள் நான்கும் காணப்பட்டன எனின், அவற்றின் கால்களின் எண்ணிக்கை?

(1) ஆடு - 15 கோழி - 4

(2) ஆடு - 20 கோழி - 8

(3) ஆடு - 19 கோழி - 7

**79.** புகையிரதமொன்றில் 240 பயணிகள் பயணித்தனர். அடுத்த புகையிரத நிலையத்தில் அரைவாசி பயணிகள் இறங்கும் அதேவேளை, இறங்கிய பயணிகளின் மூன்றில் ஒரு பங்கினர் மீண்டும் புகையிரதத்தில் ஏறினர். தற்போது புகையிரதத்தில் உள்ள பயணிகள் எத்தனை?

(1) 120 (2) 160 (3) 200

**80.** எனக்கு 14 வயதாக இருந்த போது அப்பாவின் வயது 42 ஆகும். இதற்கேற்ப அப்பாவின் வயது 37 வயதாக இருக்கும் போது எனது வயது எத்தனை?

(1) 8 (2) 9 (3) 10

**81.** ஆசிரியர் மாணவர்களுக்கு வாய்மொழியாக இலக்கங்களைக் கூறி பயிற்சிக் கொப்பியில் எழுதச் சொன்னார். நிசார் 1285 என்ற என்னை 1582 எனவும், கமலினி 1258 எனவும் எழுதினாள். ஆசிரியர் கூறிய எண்ணுக்கும் இருவரும் எழுதிய எண்களுக்கும் இடையிலான வித்தியாசத்தின் கூட்டுத்தொகை யாது?

(1) 27 (2) 297 (3) 324

**82.** விருந்தொன்றில் கலந்து கொண்ட ஐவர், குமாரிக்கும் சாரியாவுக்கும் மாறி மாறி கை குலுக்கிக் கொண்டனர். எனின் இங்கு இடம்பெற்ற கை குலுக்கல்கள் எத்தனை?

(1) 21 (2) 15 (3) 10

**83.** நீளம், அகலம் 6 cm கொண்ட சதுரமொன்றில் நீள, அகலம் 2 cm கொண்ட எத்தனை சதுரங்களை வரைய முடியும்?

(1) 9 (2) 6 (3) 4

● பின்வரும் கவிதையை வாசித்து 84, 85 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

கவலை மறந்து உழைத்திடும்
உழவர் வாழ்கவே!
வியர்வை சிந்தி வேலை செய்திடும்
உழவர் வாழ்கவே!

**84.** இப்பாடலில் வாழ்த்தப்படுபவர் யார்?

(1) ஆசிரியர் (2) வியாபாரி (3) உழவர்

**85.** அதிக வேலையின்போது எமது உடலில் ஏற்படும் மாற்றம் எது?

(1) உடல் சோர்வடைதல் (2) உடல் வியர்த்தல் (3) கவலை மறந்து விடல்

**86.** பின்வரும் தகவலின் மூலம் குறிப்பிடப்படும் பறவையைத் தெரிவு செய்க.

இது ஒரு பறவை இனம் - அது விடியலை அறிவிக்கும்
முட்டையிடாது. கூவும் - வீட்டில் வளர்க்கக் கூடியது.

(1) காகம் (2) கோழி (3) சேவல்

**87.** ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மேரி தேவாலயத்துக்குச் செல்வாள். 2021 ஆம் ஆண்டு கோவிட் - 19 நோய் காரணமாக ஆண்டின் முதல் மூன்று மாதங்கள் அவள் தேவாலயத்திற்குச் செல்லவில்லை. அவள் தேவாலயத்திற்குச் செல்லாத கிழமைகள் எத்தனை?

(1) 12 (2) 13 (3) 14

**88.** 1, 2, 3, 4, ஆகிய எண்கள் ஒன்றுவிட்டு ஒன்று இடம் மாறிக்கொண்டால் கிடைக்கும் எண்?

(1) 3214 (2) 2143 (3) 3412

**89.** மணிக்கு 60 km வேகத்தில் செல்லும் வாகனம் ஒன்று பி.ப. 10.00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்து 180 km பயணம் செய்தது. அவ் வாகனம் பயணத்தை நிறைவு செய்த நேரம் யாது?

(1) பி.ப. 1.00 (2) மு.ப. 1.00 (3) மு.ப. 2.00

**90.** சனி, ஞாயிறு தவிர்ந்த வார நாட்களில் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை அலுவலகத்துக்குச் செல்லும் ஹரி முதன் முதலில் அலுவலகத்துக்குச் சென்றது திங்கட்கிழமை எனின், அவன் ஐந்தாவது தடவை அலுவலகத்துக்குச் செல்லும் நாள் எது?

(1) திங்கட்கிழமை (2) செவ்வாய்கிழமை (3) புதன்கிழமை

**91.** தற்போது எனக்கு என்ன வயதோ, அந்த வயதை 80 இல் இருந்து நான்கு தடவைகள் கழித்தால் 20 கிடைக்கும். எனது வயது யாது?

(1) 10 (2) 12 (3) 15

**92.** ஒரு நீர்த் தொட்டியில் உள்ள நீரின் அளவு ஒவ்வொரு நிமிடமும் மூன்று மடங்காக அதிகரிக்கும். ஐந்து நிமிடத்தில் அத்தொட்டி முழுமையாக நிரம்பிட்டால், நீர்த் தொட்டியின் $\frac{1}{3}$ எப்போது நிரம்பிருக்கும்?

(1) 2 வது நிமிடம் (2) 3 வது நிமிடம் (3) 4 வது நிமிடம்



[பக். 15 ஐப் பார்க்க

**93.** உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் சிவப்பு, நீலம், பச்சை ஆகிய மாபிள்கள் ஐந்து வீதம் உள்ளன. கண்ணை மூடிக்கொண்டு மாபிள்களை வெளியே எடுக்கும் ஒருவருக்கு ஒரே நிறத்திலான நான்கு மாபிள்களைப் பெறுவதற்கு குறைந்தது எத்தனை மாபிள்களை வெளியே எடுக்க வேண்டும்?

(1) 5 வது தடவை (2) 7 வது தடவை (3) 10 வது தடவை

**94.** 30 m உயரமான கிணற்றிலிருந்து தவளை வெளியே வருவதற்கு எத்தனித்தது. தடவைக்கு 5 m பாயும் அதேவேளை 2 m சறுக்கியது. தவளை எத்தனையாவது பாய்ச்சலில் வெளியே பாயும்?

(1) 9 வது (2) 10 வது (3) 11 வது

**95.** ஒரு அலுவலகத்தில் கடமையாற்றும் ரஞ்சன் நான்கு நாட்கள் வேலை செய்தால் ஒருநாள் விடுமுறையும், ரஞ்சினி மூன்று நாட்கள் வேலை செய்தால் ஒருநாள் விடுமுறையும் கிடைக்கும். இருவருக்கும் டிசம்பர் 2 ஆம் திகதி ஒருமித்து விடுமுறை கிடைத்ததாயின் அடுத்த விடுமுறை கிடைக்கும் திகதி?

(1) 20 ஆம் திகதி (2) 21 ஆம் திகதி (3) 22 ஆம் திகதி

**96.** ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கு ஒருமுறை மணி ஒலிக்கும் கடிகாரம் ஒன்று சந்துரு மு.ப. 6.30 இற்கு படிக்கத் தொடங்கியபோது முதலாவது முறையாக ஒலித்தது. அது மு.ப. 9.00 ஆகும்போது எத்தனை முறை மணி ஒலித்திருக்கும்?

(1) 5 (2) 6 (3) 7

**97.**




அருகிலுள்ள உருவின் சுற்றளவு யாது?

(1) 23 cm

(2) 25 cm

(3) 28 cm

**98.** தரப்படும் சொற்களை ஒழுங்குபடுத்தும் போது வருவது

 - வந்தது  - வாழ்ந்து  - ஓர் ஆந்தை  - காட்டில்

(1)  (2)  (3) 

● பின்வரும் தகவலைக் கொண்டு **99, 100** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.










**99.** விலை குறைந்த பொருளும் அதன் பெறுமதியும் முறையே,

(1) புத்தகப்பை - ரூபாய் 200 (2) சப்பாத்து - ரூபாய் 450 (3) புத்தகம் - ரூபாய் 200

**100.** ரூபாய் 2000 ஐச் செலுத்தி இரண்டு சோடி சப்பாத்து, புத்தகப்பை ஒன்று ஆகியவற்றை கொள்வனவு செய்தால் அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

(1) ரூபாய் 300 (2) ரூபாய் 350 (3) ரூபாய் 400

**101.** 25 படிகள் கொண்ட படிக்கட்டில் அஹ்தா 1 வது படியிலும் அய்மன் 25 வது படியிலும் நின்றனர். அஹ்தா இரண்டு படி ஏறும் அதேவேளை அய்மன் ஒரு படி வீதம் இறங்கினால், இருவரும் எத்தனையாவது படியில் ஒன்றாக சந்திப்பர்?

(1) 8 (2) 9 (3) 17

**102.** ஒரு பாடசாலையில் மாணவத் தலைவர் பதவிற்காக வாய்மொழிப் பரீட்சை நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட மாணவனுக்கு ஐந்து வினாக்கள் கேட்கப்பட்டன. முதல் வினாவிற்கான புள்ளிகளின் எண்ணிக்கை 4 ஆகும். அடுத்த நான்கு வினாக்களின் புள்ளிகளின் எண்ணிக்கை வினாவிற்கு முந்திய வினாவின் புள்ளிகளின் எண்ணிக்கையின் மூன்றுமடங்காகும். எனில், 448 புள்ளிகளைப் பெறும் மாணவன் எந்த வினாவிற்குச் சரியாக விடையளிக்கவில்லை?

(1) மூன்றாம் (2) நான்காம் (3) ஐந்தாம்

**103.** பின்வரும் உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



(1) 12 (2) 13 (3) 14

**104.** A, B ஆகிய பாத்திரங்களின் உள்ள சீனியில் சரிபாதி வீதம் வெளியே எடுத்து அவை அப்பாத்திரங்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது பாத்திரம் A இல் உள்ள சீனியின் அளவானது, பாத்திரம் B இல் உள்ள சீனியின் அளவிலும்




(1) மிகக் குறைவானது.
(2) சமமானது.
(3) மிகக் கூடுதலானது.

**105.** ராஜாவிடம் இருந்த பணத்தொகையை விட 25 ரூபா குறைவாக ஆஷாவிடம் இருந்தது. ஆஷா 15 ரூபாவை ராஜாவிடம் இருந்து பெற்றால், ராஜாவிடம் உள்ள பணத்தொகை ஆஷாவிடம் உள்ள பணத்தொகையிலும்

(1) ஐந்து ரூபாவினால் குறைவானது.
(2) ஐந்து ரூபாவினால் கூடியது.
(3) பத்து ரூபாவினால் குறைவானது.

**106.** வட்ட வடிவ ஓட்டப் பாதை ஒன்று உருவில் தரப்பட்டுள்ளது. அமலன் 10 நிமிடத்தில் அரை சுற்று ஓடும் அதே வேளை கமலன் முழுச்சுற்றை ஓடி முடிப்பான். இருவரும் A என்னும் இடத்திலிருந்து ஒரேயடியாகப் புறப்பட்டு, ஒரே திசையில் செல்கின்றனர். எனின், அவர்கள் இருவரும் மீண்டும் சந்திக்கும் போது ஓடிய மொத்த நேரம் எவ்வளவு?




(1) 20 நிமிடங்கள்
(2) 30 நிமிடங்கள்
(3) 40 நிமிடங்கள்

## தாய்மொழி தமிழ்

**1. ஒருமைச் சொற்களை பன்மையாகவும் பன்மைச் சொற்களை ஒருமையாகவும் மாற்றுக.**

1. அம்பு ..................................................
2. வரிக்குதிரைகள் ..................................................
3. கணினி ..................................................
4. வலைகள் ..................................................
5. பாலம் ..................................................
6. மின்னஞ்சல்கள் ..................................................

**2. ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாகவும் பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாகவும் மாற்றுக.**

1. விமானம் வானில் வட்டமிட்டது. ..................................................
2. பேருந்துகள் வேகமாகச் சென்றன. ..................................................

**3. ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1. அழகு ..................................................
2. மாற்றான் ..................................................
3. களிப்பு ..................................................
4. துன்பம் ..................................................
5. நித்திரை ..................................................
6. ஏர் ..................................................

**4. எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. அண்மை ..................................................
2. உறவு ..................................................
3. ஞாபகம் ..................................................
4. மேடு ..................................................
5. இம்மை ..................................................
6. வெயில் ..................................................

**5. எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.**

1. சிறுவன் ..................................................
2. புத்திரி ..................................................
3. வீரன் ..................................................
4. புண்ணியவான் ..................................................
5. பூட்டி ..................................................
6. குணவான் ..................................................

**6. பின்வரும் வாக்கியங்களை எதிர்ப்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. அவன் என்னுடைய தம்பி. ..................................................
2. அவர் அந்த நாட்டின் பேரரசி. ..................................................
3. எனது புத்திரன் வீட்டிற்கு வந்தான். ..................................................

**7. பின்வரும் சொற்களை அட்டவணைப்படுத்துக.**

கதிரை, சலீம், கடல், கணவன், யானை, மேசை, அண்ணன், அப்பா, கதவுகள், சங்கரன்

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

**8. பின்வரும் வாக்கியங்கள் உயர்திணையா? அஃறிணையா? என புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1. யானை பிளிறியது.

   : ..........................................................................................................................................

2. ஆசிரியர் வருவார்.

   : ..........................................................................................................................................

3. காற்று வீசுகிறது.

   : ..........................................................................................................................................

**9. பின்வரும் சொற்களின் பால் வகையை எழுதுக.**

1. பாட்டன் ........................................................  2. பெண்கள் ..................................................................
3. யாழினி ........................................................  4. சங்கரன் ..................................................................
5. யானை ........................................................  6. அது ..................................................................
7. வீடுகள் ........................................................  8. பறவைகள் ..................................................................
9. சமிதா ........................................................  10. அவன் ..................................................................

**10. பின்வரும் வாக்கியங்களில் தடித்த சொற்கள் குறிக்கும் இடத்தினை (தன்மை, முன்னிலை, படர்க்கை) என எழுதுக.**

1. **நாம்** எமது தாய், தந்தையரை மதித்து நடத்தல் வேண்டும். ..................................................................
2. தாயே **நீ** அருள் புரிவாய். ..........................................................................................................
3. **கமலா** மிகுந்த அழகும் நற்குணமும் உடையவள். ..........................................................................

**11. பின்வரும் வாக்கியங்கள் குறிக்கும் காலத்தை எழுதுக.**

1. நான் பாடம் படித்தேன். ..........................................................................................
2. மேரி சிறுகதை எழுதுகிறாள். ..........................................................................
3. பறவை இரைதேடிப் பறக்கும். ..........................................................................

**12. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு, அவ்வாக்கியத்தின் கீழே எழுதுக.**

1. பசு பாலைத் தரும்.

   எழுவாய் : ...............................................  பயனிலை : .........................................................

   செயப்படுபொருள் : .................................................

2. ரமணன் கணினி வாங்கினான்.

   எழுவாய் : ...............................................  பயனிலை : .........................................................

   செயப்படுபொருள் : .................................................

3. நான் குருவியைப் பார்த்தேன்.

   எழுவாய் : ...............................................  பயனிலை : .........................................................

   செயப்படுபொருள் : .................................................

**13. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி என்பவற்றை இனங்கண்டு, அவ்வாக்கியத்தின் கீழே எழுதுக.**

1. வெள்ளைப் பசு பச்சைப் புல்லை மென்று விழுங்கியது.

எழுவாய் அடைமொழி : ........................................................................................

பயனிலை அடைமொழி : ....................................................................................

செயப்படுபொருள் அடைமொழி : ..........................................................................

2. சின்னத் தம்பி உருண்டையான பந்தை பாய்ந்து அடித்தான்.

எழுவாய் அடைமொழி : ........................................................................................

பயனிலை அடைமொழி : ....................................................................................

செயப்படுபொருள் அடைமொழி : ..........................................................................

**14. கீழே தரப்பட்டுள்ள பெயர்ச் சொற்களின் வகைகளை எழுதுக.**

1. கண், கிளை, இலை ..........................................................................................................

2. சிங்கம், கதிரை, பந்து .......................................................................................................

3. பாடுதல், ஓடுதல், படித்தல் ...............................................................................................

4. சித்திரை, காலை, புதன்கிழமை ..........................................................................................

5. கண்டி, கனடா, கீரிமலை ...................................................................................................

6. பசுமை, அன்பு, நீலம் .........................................................................................................

**15. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

1. ஆதவன் ஓவியம் வரைந்தான்

2. பாலிலிருந்து தயிர் மோர் வெண்ணெய் நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்

3. அவன் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகிவிட்டது

4. இலங்கையின் தேசிய மலர் யாது

5. புயற்காற்று ஊ... ஊ... என இரைந்தது

**16. பின்வரும் கூற்றுக்கள் அறிவித்தலா?, அறிவுறுத்தலா?, கட்டளையா? என எழுதுக.**

1. கண்ட கண்ட இடங்களில் நெகிழிகளை (பிளாஸ்டிக்) வீச வேண்டாம். ......................................................

2. பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பற்றுச் சீட்டைப் பெறாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும்.

.........................................................................

3. உணவு உண்ட பின்னர் பீங்கான், கோப்பை போன்றவற்றை இடது புறத்தில் உள்ள தட்டில் வையுங்கள்.

.........................................................................

4. வைத்தியசாலைக்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

